[5th August 1966

கனம் திரு. கோ. பூவராகன் : கட்டப்பட்ட பாகுகள் எல்லாம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. விநியோகிக்கப்படாமல் ஒன்றும் இல்லை.

Chinnangudi-Akkur Mukkuttu Road

*137 *Q.*—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any representation has been made by the Chinnangudi fishermen in Mayuram taluk about the metalling of Chinnangudi to Akkur-Mukkuttu road connecting many villages viz., Kalamanallur, Kidangal and so on; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) ஆக்கூர் முக்கூட்டிலிருந்து கிடங்கல், கலமநல்லூர், வழியாகச் சின்னக் குடிக்குச் செல்லும் சுமார் 4 மைல் நீளமுள்ள சாலையை அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை இப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

திரு. கி. இரா. சம்பந்தம் : அந்த ரோடுகளுக்கிடையே இருக்கின்ற வடிகால்களுக்குப் பாலம் கட்டபட வேண்டியிருக்கிறது. அதையும் இதோடு தொடர்ந்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ரோடு வேலையோடு சேர்ந்தது தான்.

உப்பனாற்றின் மீது பாலம்

* 138 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலூகா கடலோரப் பகுதியிலுள்ள உப்பனாற்றின் மீது பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பமாகும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) இவ்வேலை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. இராசாங்கம் : கனம் சபாநாயகர் அவர்களே, உப்பனாற்றில் பாலம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலை போட்டியின் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது சர்க்காருடைய ஏற்பாட்டினால் நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : போட்டியின் காரணமாக எந்த வேலையும் நிறுத்தப்படவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் மொத்த ரோடு வேலைக்காக ரூ. 25 லட்சம் கேட்டிருந்தோம். அதற்கு

5th August 1966]

5 லட்சம் தான் கொடுத்தார்கள். இந்த வேலையைப் பொறுத்த வரையில் 8 லட்சம் தேவைப்படுகிறது. அதனால்தான் தற்காலிக மாக இந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் ஜீப்கள்

*139 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப் வண்டிகளுக்கு ஆகும் பெட்ரோல் செலவு, ரிப்பேர் செலவு ஆகியவைகளைச் சர்க்கார் நேரடியாகக் கொடுக்கிறதா ?

(இ) ஆமெனில், 1964-65-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு யூனியனுக் கும் பெட்ரோல், ரிப்பேர் ஆகியவைகளுக்குத் தனித்தனியே எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) 1964-65-ம் ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னிலுள்ள மோட்டார் வாகனங்களுக்கு வாங்கப்பட்ட பெட்ரோல், ரிப்பேர் செலவினங்களின் விவரப்பட்டியல் [a] இத்துடன் இணைக் கப்பட்டு சட்டசபையின் மேசையின் மேல் வைக்கப்பட்டிருக் கிறது.

*140 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1964-65-ல் தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் ஜீப் கார் களுக்கு பெட்ரோலுக்காக செலவழித்தத் தொகை எவ்வளவு ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 1964-65-ம் ஆண்டில் பஞ்சாயத்து யூனியனிலுள்ள மோட்டார் வாகனங்களுக்குப் பெட்ரோல் வாங்கிய வகையில் செலவு 12,18,982 ரூபாய்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 125 கியாலன் பெட்ரோல் தான் உபயோ கப்படுத்தப்படலாம் என்று ஒரு முறை வைத்திருக்கிறார்கள். இதிலும் எமர்ஜென்சியைப் பொறுத்து 50 காலன் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு போட்டிருந்தும் செங்கற்பட்டு ஜில்லா, ஸ்ரீ பெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனில் 6,000 ரூபாய் பெட்ரோ லுக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் கிணற்றுக்கடவு என்ற யூனியனில் 10 ஆயிரம் ரூபாய் பெட்ரோல் செலவு செய்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. சே. ம. அ மஜீத் : இதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. ஒருவேளை ஜில்லாக் கலெக்டர் அவர்களி டமிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தோ,

a 588–596-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.